**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)**
**VANIYAMBADI**

**PG & RESEARCH DEPARTMENT OF TAMIL**

**II B.A., TAMIL – SEMESTER – 1V**

**E-NOTES (STUDY MATERIAL**

| |
|---|
| **C - Course - 2 நன்னூல்**<br>**Code : 23UTA42** |
| **Unit : 1 பெயரியல்** |
| Learning Objectives :<br>**சொற்களை அதனதன் பொருளுக்கு ஏற்ப பெயர்ச்சொல் வினைச்சொல் என்பனவாக பிரித்துக் கையாளக் கற்றிருத்தல்** |
| **Coures Outcome:**<br>**இடைக்கால இலக்கண மரபுகளை அறிவர்.** |

**Overview**

பெயரியல் என்பது ஒரு மொழியில் உள்ள பெயர்ச்சொற்களின் இலக்கண விதிகளைக் குறிக்கும் ஒரு பிரிவு ஆகும். இது பெயர்ச்சொற்களின் வகைகள், அவற்றின் வேற்றுமைப் பயன்பாடு, எழுத்துமுறை, சொற்பொருள் போன்றவற்றை விளக்குகிறது. பெயரியல், ஒரு மொழியின் தொடர் அமைப்பு மற்றும் சொற்களின் பொருளைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

**அலகு - 1**

நன்னூல் சொல்லதிகாரத்தின் முதல் இயல் பெயரியல் ஆகும். இதில் பெயர்களின் இலக்கணம், பாகுபாடு, மற்றும்

**வேற்றுமை பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. நன்னூலின் சொல்லதிகாரத்தில் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து இயல்கள் உள்ளன. பெயரியல், பெயர்ச்சொற்களின் இலக்கணத்தை விளக்குகிறது, இதில் உயர்திணை, அஃறிணை, பொதுப்பெயர் ஆகியனவும், வேற்றுமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. பெயரியல் இயலில் மொத்தம் 62 நூற்பாக்கள் உள்ளன.**

பெயரியல், பெயர்ச்சொற்களைப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகையின் இலக்கணப் பண்புகளையும் விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, ஆண்பால், பெண்பால், பலர்பால் போன்ற பெயர்ச்சொற்களின் வகைகள், அவற்றின் வேற்றுமைப் பயன்பாடு.

**வேற்றுமைப் பயன்பாடு:**

பெயர்ச்சொற்கள் வேற்றுமைகளுடன் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் பெயரியல் விளக்குகிறது. வேற்றுமைகளைப் பயன்படுத்தி, பெயர்ச்சொற்கள் வாக்கியத்தில் வேறெந்த சொற்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதையும், பொருளை எவ்வாறு வழங்குகின்றன என்பதையும் பெயரியல் விளக்குகிறது.

**எழுத்துமுறை:**

பெயர்ச்சொற்களின் எழுத்துமுறை மற்றும் எழுத்துக்களின் வரிசை போன்றவற்றை பெயரியல் விளக்குகிறது. ஒரு மொழிக்குரிய எழுத்து முறையை பயன்படுத்தி, சொற்களை எவ்வாறு சரியாக எழுதுவது என்பதையும் பெயரியல் கூறுகிறது.

**சொற்பொருள்:**

பெயர்ச்சொற்களின் பொருள், சொற்பொருள் அடிப்படையில் சொற்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும், சொற்களின் பொருளை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதையும் பெயரியல் விளக்குகிறது.

**தொடர் அமைப்பு:**

பெயரியல், பெயர்ச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எவ்வாறு அமைப்பது என்பதை விளக்குகிறது. பெயர்ச்சொற்களின் தொடர் அமைப்பு மூலம் ஒரு வாக்கியத்தின் பொருளை எவ்வாறு சரியாக புரிந்து கொள்வது என்பதையும் பெயரியல் கூறுகிறது.

**சொல் இலக்கணம்**

**ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் சேர்ந்து வந்தோ பொருள் தருவது சொல் இலக்கணம் எனப்படும். உதாரணம்: வீடு, கண், போ, வா.**

**வகைகள்:**

**பெயர்ச்சொல்**

**வினைச்சொல்**

**இடைச்சொல்**

**உரிச்சொல்**

**1.பெயர்ச்சொல்: ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல். உதாரணம்: தமிழ்ச்செல்வி, மாம்பழம், எழுதுகோல்.**

**2. வினைச்சொல்: ஒரு பொருளின் வினையை உணர்த்துவது வினைச்சொல். (வினை= செயல்)**

**உதாரணம்: 1. மயில் ஆடியது.**

**2.மங்கை பாடினாள்.**

**இதில் ஆடியது என்பது வினைச்சொல். பாடினாள் என்பது வினைச்சொல்.**

3.இடைச்சொல்: இடைச்சொல் என்பது தனித்து நின்று பொருள் தராது. பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும் இடையில் நின்று பொருளை விளக்கும் சொல் ஆகும். இவை நுணுக்கமான பொருள் வேறுபாடுகளை உணர்த்தவும், உணர்ச்சிகளையும் , கருத்து ளையும் மிகத்தெளிவா கூறவும் பயன்படுகின்றன.

உதாரணம்: கவிதா பார்த்தாள். கவிதாவைப் பார்த்தாள்.

4. உரிச்சொல்: உரிச்சொல் என்பது ஒன்றுக்கு ஒன்று உரிமை உடையாத விளங்கும் சொல் ஆகும். இது, பெயர்ச் சொல்லாகவோ, வினைச் சொல்லாகவோ, பெயருக்கு அடை மொழியாகவோ, வினைக்குஅடைமொழியாகவோ, பெயர்க்கும் வினைக்கும் பொதுவானதாகவோ இருக்கும்.

பெயர்ச்சொல் :

ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொல் தோன்றும்.

வகைகள்:

- பொருட்பெயர்
- இடப்பெயர்
- காலப்பெயர்
- சினைப்பெயர்
- பண்புப் பெயர்
- தொழிற்பெயர்

பொருட்பெயர்: பொருளின் பெயர்க்கு ஆகிவருவது பொருட்பெயர்.

(எ.கா) உயர்திணைப் பொருட்பெயர்: முத்து, வள்ளி.

அஃறிணைப் பொருட்பெயர்: பசு, புத்தகம், நாற்காலி.

இடப்பெயர்: இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர்.

(எ.கா) பொது இடப்பெயர்: மாநகரம், கோவில்.
சிறப்பு இடப்பெயர்: சென்னை, விஷ்ணு கோவில்.

காலப்பெயர்: காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர்.

(எ.கா) பொது காலப்பெயர்: மாதம், ஆண்டு.
சிறப்பு காலப்பெயர்: சித்திரை, விபவ.

சினைப்பெயர்: சினை என்றால் "உறுப்பு". பொருட்களின் சினையைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர்.

(எ.கா) உயர்திணைச் சினைப்பெயர்: கை, கண்.
அஃறிணைச் சினைப்பெயர்: இலை, வேர்.

பண்பு(அ)குணப்பெயர்: பொருட்களின் தன்மையைக்
குறிக்கும் சொல் பண்புப் பெயர்.

(எ.கா)

நீலம் - நிறமாகிய பண்பு
மென்மை - தன்மையாகிய பண்பு
புளிப்பு - சுவையாகிய பண்பு

தொழிற்பெயர்: ஒருவரின் தொழிலை குறிக்கும் பெயர் தொழிப்பெயர். தொழிற்பெயர் பெரும்பாலும் “தல்” விகுதி பெற்றே வரும்.

(எ.கா) உழுதல், ஓடுதல், பயிரிடுதல்.

**பெயர்ச்சொல் :**

**ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொல் தோன்றும்.**

**வகைகள்:**

- பொருட்பெயர்
- இடப்பெயர்
- காலப்பெயர்
- சினைப்பெயர்
- பண்புப் பெயர்
- தொழிற்பெயர்

**பொருட்பெயர்:** பொருளின் பெயர்க்கு ஆகிவருவது பொருட்பெயர்.

(எ.கா) உயர்திணைப் பொருட்பெயர்: முத்து, வள்ளி.

அஃறிணைப் பொருட்பெயர்: பசு, புத்தகம், நாற்காலி.

**இடப்பெயர்:** இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர்.

(எ.கா) பொது இடப்பெயர்: மாநகரம், கோவில்.

சிறப்பு இடப்பெயர்: சென்னை, விஷ்ணு கோவில்.

**காலப்பெயர்:** காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர்.

(எ.கா) பொது காலப்பெயர்: மாதம், ஆண்டு.

சிறப்பு காலப்பெயர்: சித்திரை, விபவ.

**சினைப்பெயர்:** சினை என்றால் "உறுப்பு". பொருட்களின் சினையைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர்.

(எ.கா) உயர்திணைச் சினைப்பெயர்: கை, கண்.

அஃறிணைச் சினைப்பெயர்: இலை, வேர்.

பண்பு(அ)குணப்பெயர்: பொருட்களின் தன்மையைக் குறிக்கும் சொல் பண்புப் பெயர்.

(எ.கா)

நீலம் - நிறமாகிய பண்பு

மென்மை - தன்மையாகிய பண்பு

புளிப்பு - சுவையாகிய பண்பு

தொழிற்பெயர்: ஒருவரின் தொழிலை குறிக்கும் பெயர் தொழிப்பெயர். தொழிற்பெயர் பெரும்பாலும் “தல்” விகுதி பெற்றே வரும்.

(எ.கா) உழுதல், ஓடுதல், பயிரிடுதல்.

ஆகுபெயர்

ஒன்றன் பெயர் தனக்குரிய பொருளை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா) உலகம் சிரித்தது. என் பள்ளி வென்றது.

இவற்றில் உலகம், பள்ளி என்னும் இடப்பெயர்கள் இடத்தை உணர்த்தாமல் உலகில் உள்ள மக்களையும் பள்ளியில் உள்ள மாணவர்களையும் உணர்த்துகின்றன. எனவே இவை ஆகுபெயர் எனப்பட்டன.

ஆகுபெயரை எண்ணிக்கை அடிப்படையில் பலவாகக் கூறலாம். அவற்றை இங்கே காண்போம்.

1) பொருளாகு பெயர்

2) இடவாகு பெயர்
3) காலவாகு பெயர்
4) சினையாகு பெயர்
5) பண்பாகு பெயர்
6) தொழிலாகு பெயர்
7) அளவையாகு பெயர்
8) சொல்லாகு பெயர்
9) தானியாகு பெயர்
10) கருவியாகு பெயர்
11) காரியவாகு பெயர்
12) கருத்தாவாகு பெயர்
13) உவமையாகு பெயர்

பொருள் முதல் ஆறு ஆகுபெயர்கள்

பொருள்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப் பெயர், தொழில்பெயர் என்னும் அறுவகைப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு வரும் ஆகுபெயர்களைப் பொருள் முதல் ஆறு ஆகுபெயர்கள் என்பர்.

பொருளாகு பெயர்

முதற்பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆகி வருவது பொருளாகுபெயர் எனப்படும். இது முதலாகு பெயர் என்றும் வழங்கப் பெறும்.

(எ.கா) முல்லை மணம் வீசியது.

இதில் முல்லை என்பது முல்லைக் கொடியின் பெயர். இங்கே மணம் வீசியது என்னும் குறிப்பால் இது சினைப் பொருளாகிய முல்லைப் பூவுக்கு ஆகி வந்துள்ளது.

இடவாகு பெயர்

ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஊர் கூடியது.

இதில் ஊர் என்னும் இடப்பெயர் கூடியது என்னும் குறிப்பால் ஊரில் உள்ள மக்களுக்கு ஆகி வந்துள்ளது.

காலவாகு பெயர்

ஒரு காலத்தின் பெயர் அந்தக் காலத்தோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) கார் அறுவடை ஆயிற்று.

இதில் கார் என்பது காலப்பெயர். இங்கே அறுவடை ஆயிற்று என்னும் குறிப்பால் இது கார்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்துள்ளது.

சினையாகு பெயர்

ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) தலைக்குப் பத்து ரூபாய் கொடு.

இதில் தலை என்னும் சினைப் பொருளின் பெயர், பத்து ரூபாய் கொடு என்னும் குறிப்பால் அந்தத் தலையை உடைய மனிதனுக்கு ஆகி வந்துள்ளது.

| முதலாகு பெயர் | சினையாகு பெயர் |
|---|---|
| முதற்பெயர் சினைப் பொருளுக்கு ஆகி வரும். | சினைப்பெயர் முதற்பொருளுக்கு ஆகி வரும். |

பண்பாகு பெயர்

ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இது குணவாகு பெயர் என்றும் வழங்கப்பெறும்.

(எ.கா) இனிப்பு உண்டான்.

இதில் இனிப்பு என்னும் சுவைப் பண்பின் பெயர் அச்சுவை கொண்ட பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

தொழிலாகு பெயர்

ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

(எ.கா) சுண்டல் உண்டான்.

இதில் சுண்டல் என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

அளவை ஆகு பெயர்கள்

எண்ணல் எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலிய அளவைப் பெயர்கள் ஆகுபெயர்களாக வரும்.

எண்ணல் அளவையாகு பெயர்

ஓர் எண்ணல் அளவையின் பெயர் அந்த எண்ணிக்கையில் உள்ள பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஒன்று பெற்றால் ஒளி மயம்.

இதில் ஒன்று என்னும் எண்ணல் அளவைப் பெயர் அந்த எண்ணுள்ள பொருளுக்கு (குழந்தைக்கு) ஆகி வந்திருப்பதால் எண்ணல் அளவையாகு பெயர் எனப்பட்டது.

எடுத்தல் அளவையாகு பெயர்

ஓர் எடுத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) மூன்று கிலோ வாங்கி வா.

இதில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

முகத்தல் அளவையாகு பெயர்

ஒரு முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) ஐந்து லிட்டர் வாங்கி வா

இதில் லிட்டர் என்னும் முகத்தல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

நீட்டல் அளவையாகு பெயர்

ஒரு நீட்டல் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) இரண்டு மீட்டர் கொடுங்கள்.

இதில் மீட்டர் என்னும் அளவையின் பெயர் அந்த அளவுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

சொல்லாகு பெயர்

சொல்லைக் குறிக்கும் பெயர் சொல்லுடைய பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் எனப்படும்.

(எ.கா) இந்த உரை எனக்கு மனப்பாடம்.

இதில் உரை என்னும் சொல், அச்சொல்லின் பொருள் அமைந்த நூலுக்கு ஆகி வந்துள்ளது.

தானியாகு பெயர்

ஓர் இடத்தில் உள்ள பொருளின் பெயர் (தானி) அது சார்ந்திருக்கும் இடத்திற்கு (தானத்திற்கு) ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும்.

(எ.கா) அடுப்பிலிருந்து பாலை இறக்கு.

இதில் பால் என்பது அது சார்ந்திருக்கும் பாத்திரத்தைக் குறிக்கிறது. பாலை இறக்கு என்றால் பால் இருக்கும் பாத்திரத்தை இறக்கு என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

கருவியாகு பெயர்

ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆகும் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.

(எ.கா) நான் குறள் படித்தேன்.

இதில் குறள் என்பது குறள் வெண்பாவைக் குறிக்கும் சொல். ஆனால் இங்கே குறள் வெண்பாவால் ஆக்கப்பட்ட பாக்களைக் குறிக்கிறது.

காரியவாகு பெயர்

ஒரு காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்கு (கருவிக்கு) ஆகி வந்தால் காரியவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) நான் அலங்காரம் கற்றேன்.

இதில் அலங்காரம் என்னும் சொல் அலங்காரத்தைக் (அணியை) கற்பிக்கும் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

கருத்தாவாகு பெயர்

ஒரு கருத்தாவின் பெயர் அக்கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

(எ.கா) இவருக்கு வள்ளுவர் மனப்பாடம்.

இதில் வள்ளுவர் என்னும் சொல் வள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் நூலுக்கு ஆகி வந்துள்ளது.

உவமையாகு பெயர்

ஓர் உவமையின் பெயர் அதனால் உணர்த்தப் பெறும் உவமேயத்திற்கு ஆகி வருவது உவமையாகு பெயர் எனப்படும்.

(எ.கா) காளை வந்தான்.

இதில் காளை என்னும் சொல், காளை போன்ற வீரனுக்கு ஆகி வந்துள்ளது.

| | |
|---|---|
| காளை | - உவமை |
| வீரன் | - பொருள் |

பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத்
தொல்முறை உரைப்பன ஆகுபெயரே

(நன்னூல் : 290)

பொருள்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப் பெயரை அடிப்படையாகக் கொண்டவையும், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் முதலான அளவைப் பெயர்களும், சொல், தானி, கருவி, காரியம், கருத்தா முதலானவையும் தம்மோடு தொடர்புடைய வேறு பொருளுக்குப் பெயராகிப் பழங்கால முதல் சொல்லப்பட்டு வருவன ஆகுபெயர் என்பது இதன் பொருள்.

எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை

எட்டாம் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லை. படர்க்கைப் பெயரை முன்னிலையாக விளிப்பது அதன் பொருள் ஆகும். விளித்தல் என்பதற்கு அழைத்தல் அல்லது கூப்பிடுதல் என்பது பொருள். எட்டாம் வேற்றுமை விளிப்பொருளில் வருவதால் இது விளிவேற்றுமை எனப் பெயர் பெற்றது.

எடுத்துக்காட்டாக, 'இராமா! வா' என விளிக்கும்போது (அழைக்கும் போது) இராமன் என்னும் படர்க்கைப்பெயர் முன்னிலைப் பொருளுக்கு உரியது ஆகின்றது.

பெயர்ச்சொற்கள் விளிக்கப்படும்பொழுது பெயரின் இறுதியில் சில மாறுதல்கள் ஏற்படும். அவை, ஈறு திரிதலும் (இறுதிஎழுத்து மாறுதல்), ஈறு குன்றலும் (குறைதல்), ஈறு மிகுதலும், இயல்பாக வருதலும், ஈற்றுஅயல் எழுத்துத் திரிதலும் ஆகும். (ஈற்றயல் எழுத்து = இறுதி எழுத்துக்கு முந்தைய எழுத்து.)

எடுத்துக்காட்டு

விளிவேற்றுமையில் ஏற்படும் மாறுதல்களை மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. இவை முதல் வேற்றுமைபோல இயல்பான பெயராக இல்லை. திரிந்து வந்துள்ளன.

படர்க்கை ஐம்பாலும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்) விளிஏற்கும் என்பதால் இவ்வுருபிற்கும் எழுவாய் உருபிற்கும் சொல்லால் வேற்றுமை இல்லை என்றாலும் பொருளால் வேற்றுமை உண்டு.

| | | |
|---|---|---|
| தந்தை | - தந்தாய் ! | ஈறுதிரிதல் ('ஐ' என்னும் இறுதி எழுத்து ஆய் எனத் திரிந்தது) |
| தங்கை | - தங்காய் ! | |
| அன்னை | - அன்னாய்! | |

| | | |
|---|---|---|
| மன்னன் வருக! | - மன்ன! வருக | ஈறுகுன்றல் ('ன்' என்ற இறுதி எழுத்துக் குறைந்தது) |
| நண்பன் | - நண்ப! | |
| புலவன் | - புலவ! | |

| | | |
|---|---|---|
| அரசன் | - அரசனே | ஈறுமிகுதல் (ஏகாரம் மிகுந்து வந்தது) |
| இறைவன் | - இறைவனே | |
| மகன் | - மகனே | |

| | | |
|---|---|---|
| தம்பி | - தம்பி! | இயல்பாக வந்தது. (மாற்றம் இன்றி வருவது) |
| தோழி | - தோழி! | |
| மாமி | - மாமி! | |

| | | |
|---|---|---|
| மக்கள் | - மக்காள் | ஈற்றுஅயல் (இறுதி எழுத்துக்கு முந்தைய எழுத்து) நீண்டது |
| வணிகர் | - வணிகீர் | |
| புலவர் | - புலவீர் | |

| | |
|---|---|
| அப்பா வந்தார் | - எழுவாய் வேற்றுமை |
| அப்பா தாருங்கள் | - விளிவேற்றுமை |

இவ்வாறு எழுவாய் வேற்றுமையிலிருந்தும் சிறிது வேறுபட்டு நிற்பதால் இதனை இறுதியில் வைத்து எட்டாம் வேற்றுமையாக இலக்கண நூலார் அமைத்தனர்.

எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபுமாம் : பொருள் படர்க்கை யோரைத்
தன்முகமாகத் தான்அழைப் பதுவே

(நன்னூல் : 303)

**அண்மைவிளியும் சேய்மைவிளியும்**

இவ்விளிவேற்றுமை அண்மைவிளி, சேய்மைவிளி என இரு வகைப்படும்.

அருகில் உள்ளவரை அழைப்பது அண்மை விளி; தொலைவில் உள்ளவரை அழைப்பது சேய்மை விளி.

(அண்மை = அருகு, சேய்மை = தொலைவு)

எடுத்துக்காட்டு

| | | |
|---|---|---|
| இராமன் | - இராம! | அண்மைவிளி |
| அம்மா | - அம்ம! | |
| இராமன் | - இராமா, இராமனே, | சேய்மைவிளி |

| | | |
|---|---|---|
| | இராமாவோ | |

இராமாவோ என்பது புலம்பலில் வரும் விளி.

**விளி ஏற்கும் பெயர்கள்**

விளி ஏற்கும் பெயர்களுள் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், பொதுப்பெயர் என்று பிரித்து அவை விளி கொள்ளும் முறையை இலக்கண நூலார் விளக்குவர்.

**விளி ஏலாப் பெயர்கள் (விளி கொள்ளாப் பெயர்கள்)**

தன்மைப் பெயர்கள் விளி கொள்ளா.

முன்னிலைப் பெயர்கள் விளி கொள்ளா.

படர்க்கைப் பெயர்களுள் நுமன், நுமன், நுமர் ஆகிய கிளைப்பெயர்கள் விளி கொள்ளா. எவன், எவள், எவர், எது, எவை போன்ற வினாப்பெயர்களும்,

அவன், அவள், அவர், அது, அவை

இவன், இவள், இவர், இது, இவை

உவன், உவள், உவர், உது, உவை

ஆகிய சுட்டுப் பெயர்களும், தான், தாம் என்ற படர்க்கைப் பெயர்களும், மற்றையான், பிறன் போன்ற பிறபெயர்களும் விளி கொள்ளாத பெயர்கள் ஆகும்.

வினாக்கள்

1. திணை என்றால் என்ன? அதன் வகைகளுக்குச் சான்று தருக.

2. உயர்திணை அஃறிணைகளில் அடங்கும் பால்கள் யாவை?

3. மூன்றாம் பால்பகுப்புப் பற்றி நன்னூலாரின் கருத்தைத் குறிப்பிடுக.

4. மூவிடங்கள் யாவை? அவற்றிற்குரிய பொதுப்பெயர்கள் யாவை?

5. திரிசொல் என்றால் என்ன? விளக்கிச் சான்று தருக.

6. வடசொற்கள் தமிழில் எவ்வாறு இடம்பெறும் எ-டு தருக.

7. தொழிற்பெயர், வினையால் அணையும் பெயர்களுக்குரிய இடங்கள் யாவை?

8. ஆகுபெயர் என்பதற்கு விளக்கம் தருக.

9. வேற்றுமை என்றால் என்ன?

10. வேற்றுமை உருபுகளை ஏற்காத பெயர்களைக் குறிப்பிடுக.